தி.மு.க. இளைஞர் அணி 2வது

## மாநில மாநாட்டு இருசக்கர வாகன பிரச்சார பேரணி!

### திருவாரூர் மாவட்டத்தில் உற்சாக வரவேற்பு!

திருவாரூர், நவ.23-


தி.மு.க. இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு சேலத்தில் நடைபெறுவதையொட்டி, மாநிலம் முழுவதும் இருசக்கர வாகன பிரச்சார பேரணியை கழக தலைவர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் ஆலோசனைகளின்படி, இளைஞர் அணி செயலாளரும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். இந்த பிரச்சார பேரணியில் பங்கேற்பவர்கள் வள்ளுவர்மண்டலம், பெரியார்மண்டலம், அண்ணா மண்டலம், கலைஞர் மண்டலம் என நான்கு மண்டலமாகப் பிரித்து அவைகளில் அணி அணி யாகச் சென்று பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

கலைஞர் மண்டலமான திருவாரூர் மாவட்டம் முழுவதும் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, நன்னிலம், திருவாரூர் என நான்கு தொகுதிகளிலும் இந்த இருசக்கர வாகன பேரணி சென்ற நிலையில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் அவர்களின் ஆலோசனை களின்படி அனைத்து இடங்களிலும் கழக நிர்வாகிகளும் பொதுமக்களும் திரண்டுநின்று உற்சாக வரவேற்பளித்தனர்.

வாகனத்தை ஓட்டி பிரச்சாரம் செய்து வரும் இளைஞர்களை மாவட்ட எல்லையான வடுவூரில் வரவேற்று திருவாரூர் கலைஞர் கோட்டம் வரை பேரணியை எழுச்சியோடு திருவாரூர் மாவட்ட கழகமும், இளைஞர் அணியும் வழிநடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தி மாநாடு பிரச்சாரத்தை மேற்கொண்டது. மேலும் வழிநெடுகிலும் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும் பொதுமக்களும் நீட் தேர்வு விலக்குக்கான கையெழுத்து இட்டு அதனை இளைஞர் அணி நிர்வாகிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்த வரவேற்பு நிகழ்வில் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை யில் இளைஞர் அணி மாநில துணை செயலாளர் நா.இளையராஜா, சேலம் ராஜா, மாவட்ட அமைப் பாளர் ஏ.எஸ்.குமார், மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.பி.எடிசன், வினோத்கு மார், தாகிர் அலி, கல்யாண சுந்தரம், சி.கே.எழிலரசன், முருகானந்தம், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு கிளைக்கழக நிர்வாகி கள், அனைத்து சார்பு அணிகளின்பொறுப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்



## முரசொலி மாறன்

### நவம்பர் 23 (2003)

“திராவிட இயக்க முன்னோடி – கழகத்தின் தூண் – ஈடில்லா சிந்தனைச் செம்மல் – மாபெரும் ராஜதந்திரி – முரசொலியின் பிதாமகன் – கழகத்தின் மூளை – கலைஞரின் மனசாட்சி” என அடைமொழிகள் பலவற்றால் அன்பு தவழ அழைக்கப் பெற்றவர்.

தமது 35 ஆண்டு காலத்திற்கும் மேலான நாடாளுமன்ற அனுபவத்தால், நாடாளுமன்ற ஜனநாயக முறைகளை பழுதற உணர்ந்த, பேணிய பண்பாளர்.

மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சராக திறம்பட பணியாற்றி பெரும்புகழ் பெற்றவர்.

எழுத்தாளராக, பத்திரிகையாளராக, திரைப்பட கதாசிரியராக, வசன கர்த்தாவாக, பாடலாசிரியராக, இயக்குநராக, தயாரிப்பாளராக பன்முகப் பரிமாணங்கள் கொண்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக சிறையில் அதிகாரிகளின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு ஆளானவர்.

தன் இறுதிக்காலம் வரை கழகத்திற்கோ, தலைவருக்கோ, கிஞ்சித்தும் மாற்றுக் கருத்தோ, துரோக சிந்தனையோ இல்லாமல் கழகமே மூச்சென பணியாற்றிய பண்பாளர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## விழுப்புரத்தில் வாகனப் பிரச்சாரப் பேரணி - அமைச்சர் க.பொன்முடி வரவேற்றார்!

விழுப்புரம், நவ 23-

விழுப்புரம் வருகை புரிந்த இருசக்கர வாகன பிரச்சாரக் குழுவினர் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் . மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ. முன்னிலையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து விழுப்புரம் நகரம், கோலியனூர் ஒன்றியம், வளவனூர் பேரூராட்சி, கண்டமங்கலம் ஒன்றியம், கோட்டக்குப்பம் நகரம், வானூர் கிழக்கு மற்றும் மேற்கு, கிளியனூர் ஆகிய பகுதிகளில் பேரணியாகச் சென்றனர்.

சட்டமன்ற டாக்டர் இரா.இலட்சுமணன் , மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன்,, நகரச் செயலாளர் இரா. சக்கரை, நகர மன்றத் தலைவர் ச. தமிழ்ச்செல்வி பிரபு, ஒன்றிய குழுத் தலைவர்கள் ஆர். எஸ். வாசன், சச்சிதானந்தம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ தினகரன், வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சுவை. சுரேஷ். ஒன்றியச் செயலாளர்கள் மும்மூர்த்தி.க, பி. தெய்வசிகாமணி, வே. கணேசன், வி. ஜி. பிரபாகரன், கு. செல்வமணி,

பி. கே. டி. முரளி, எஸ். எஸ். ஜெயமூர்த்தி, மைதிலி இராஜேந்திரன், கிளியனூர் இராஜி , பேரூர் செயலாளர் பா.ஜீவா, ஒன்றிய குழுத் தலைவர் உஷா பி. கே.டி. முரளி, துணைத் தலைவர் பருவ கீர்த்தனா விநாயக மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாஸ்கரன், பொதுக்குழு உறுப்பினர் இளங்கோ, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தலைமைக் கழகப் பேச்சாளர்

## பவானி கண்ணன் இல்லத் திருமண வரவேற்பு!

### கழக முன்னணியினர் பங்கேற்பு!

ஈரோடு, நவ.23-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடனும், கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடனும் ஈரோடு மாவட்டம் பவானி வட்டம் குணசேகரன் மீனாட்சி ஆகியோரது மகள் கு. கமலி, கரூர் மாவட்டம் தங்கவேல் மருதாம்பாள் ஆகியோரது மகன் த.பால சுப்பிரமணியம் ஆகியோர் திருமண விழா நாளை (24.11.2023 - வெள்ளிக் கிழமை காலை 6 மணிக்கு மேல் 10 மணிக்குள் நடைபெறுகிறது. பின்னர் ஈரோடு மாவட்டம் பவானி கூடுதுறை ஸ்ரீ ஐயப்ப சேவா மிஷன் டிரஸ்ட்டில் திருமண வரவேற்பு விழா நடைபெற உள்ளது.

திருமண வரவேற்பு விழாவில் கழக முன்னணியினர், மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.




23-11-2023
20 ஆம் ஆண்டு நினைவு நாள்


அண்ணாவின்
அறிவுத் திருவிளக்கே!

கலைஞரின்
மனசாட்சி மாணிக்கமே!

படை நடத்தும்
“இளம் தென்றல்”
படைத்திட்ட
பவளவிழா கண்டீரோ!

மாலையும் கழுத்துமாய்
மலைபோல நின்றீரோ!

இவண்
இராணிப்பேட்டை ஆர்.காந்தி
கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்
மாவட்ட செயலாளர்




இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க.